
941

சுப்பிரமணியர் துணை.

# S. G. கிட்டப்பா
# K. S. செல்லப்பா
## K. B. சுந்தராம்பாள்
## பார்டிவரும்

# தசாவதாரம் எனும்
## தியாநுமிர்தத் திரட்டு.

OFFICE OF THE REGISTRAR OF CO...
12 MAY 19..
MADRAS



வடிவேலு முதலியார் அவர்கள் இயற்றியதை
குன்னத்தூர் ஆ. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களால்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பிரஸ்.
பதிப்பிக்கப்பட்டது.
கும்பகோணம்,
[… ரட்.] 1926 [விலை அணா 2.

O-8 ... 3, J
N26
108580

உ

சுப்பிரமணியர் துணை.

# S. G. கிட்டப்பா
# K. S. செல்லப்பா
## K. B. சுந்தராம்பாள்

பாடிவரும்

# தசாவதாரமென்னும்

## தியானாமிர்தத் திரட்டு.



வடிவேலு முதலியார் அவர்கள் இயற்றியதை
குண்ணத்தூர் ஆ. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களால்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பிரஸ்.
பதிப்பிக்கப்பட்டது.
கும்பகோணம்,

ரிஜிஸ்டர் காபிரைட்.] 1926 [விலை அணா.2-

REGISTRAR OF B... MADRAS 12 MAY 1927

148580

ஸ்ரீராமஜெயம்.

ஸ்வதந்திரம் எனும்

தியானுமிர்தத் திரட்டு.

மூஷிக வாஹன மோதகஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

பல்லவி.

சாதுஜனார்த்தன ராமா நந்தசோமா
பலபீமா ஹரி ராமா சாது
ஜனனமர்ன சௌபாங்குசநாமா
சகலலோகாபீ நாமா பலபீமா சாது

கண்ணிகள்

சித்தாசேவித்த சிந்தித்துநாமா
சித்தஜன வஞ்சித்த நாமா சாது

அருணகிரிநாதர் — திருப்புகழ்.

நாத விந்துகலாதீ நமோநம—வேத மந்த்ரசொரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி
நாமசம்புகுமாரா நமோநம—போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தமயூரா நமோநம பரசூரர்
சேத தண்டவிநோதா நமோநம—கீத கிண்கிணி பாதாநமோநம
தீரசம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீபமங்கள ஜோதீ நமோநம—தூயஅம்பல லீலா நமோநம
தேவகுஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈதலும்பல கோலால பூஜையும்—ஓதலுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீபாத சேவையு மறவாத
ஏழ்தலம்புகழ் காவேரியால்விளை—சோழமண்டலமீதே மனோகர
ராஜகெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆதரம்பயிலாரூரர் தோழமை—சேர்தல் கொண்டவரோ டேமுநா [ளினில்
ஆடல்வெம்பரி மீதேரி மாகயி லயிலேகி
ஆதியந்தவு லாவாசு பாடிய—சேரர்கொங்குவை காவூர்நனாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

(பூரி கல்யாணி.)

பராந்தாமனே பத்தர்என்னைகாரும்
நிரந்தரமான நீலோர்பொற்பாதா
நித்தியகந்தனே முத்திவைகுந்தோனே
பத்தர் அனுக்கூலா இஷ்டர்பரிபாலா

துஷ்டநிஜயகாலா மட்டில்வெகுசாலாய்
அரவணைமேலாய் நத்தியபூதவி அம்மையும்சிதேவி
பற்றிகால்தழுவ நித்தியானந்தரூபனே
வரம்கொண்ட இரணியன் மார்பைகிழித்து

மைந்தன் பிரகலாதன் அருளைகொடுத்து
உரங்கொண்டமுதலை யானையைபற்ற
ஓலம்கொண்டு நாமம் உரைக்கக் காத்தாய் (பராந்)

இந்துஸ்தான் தோடி.

ஆஹா மாதவா கோபாலகிருஷ்ண
அன்பாகவே நயவாய் ஆர்வமுடவருவ (ஆஹா)
ஆயர்சகாயா யாதரி யதிர் சதுரா
தேவா முராரி சிரோர்மணி (ஆஹா)
தேவகிபாலா வா வா கார் கார் மாதவா
ஸ்ரீயபதி கருணைவாருதி ஜெயசீனிவாசநேச ஆ
தேஜோன் மயவடிவ ஸ்ரீயபதி
துவாரகநாதா யாணிக்கிதி திகழ்பாதா வேணுசுக்கிகான விரப்பு ஆ

1 சரணகமல சேவையே சிலாக்யம்
ஹா ஹா ஹா ஹா ஹா ஆம்நிஜமே

2 தாசஜன பரிபாலரடி சகல சுப குணளரடி
சிலரடி ஜாலவசுரர் காலரடி என்னரும்
துணையெனவரு மண்ணரடி கண்ணரடி ஹா (ஆம்நிஜ)

3 சாமளவர்ண ரூபரடி சகல்சுப குணளரடி
நேமரடி நித்யசர்வபூமரடி எம்மையே
தினமும்வந்தருள் புண்யரடி கண்யரடி ஹா [ஆம்நிஜ]

வர்ணமெட்டு தோணியா எக்கமுராபர்.

1 அடடா அடடா பாவிநீ என்னை தீண்டாதே வேண்டாம்
பாழும் நரகில் விழாதே அடடா

2 பாரில் பெண்பழியே நேருமென் றெண்ணி
பாரடா மூடாஉன்

3 இஜாநீதியாவும் கடந்தால் நாசமடைவாய்நீ
மோசத்துரோகி துஷ்டா கெட்டடாய் மூர்க்கா துன்மார்க்கா

4 மோசத்துரோகி துஷ்டா கெட்டாய் மூர்க்கா துன்மார்க்கா
மானமுனக்கென்றேயறி யாமல்வம்புசெய்யாதே
மந்திடாதே அடடா

வேறு.

ஸ்ரீதரா ஸ்ரீநாராயணா ஸ்றிஸ்ரீஹரிநாதா கோவிந்தா
தேவ தேவா வைகுந்தவாசா தீனதயாளா ஹரி ஹரி

தாஸகோட்டி சாமுண்யா சாமள ரூப லாவண்யா
கேசவாஸ்ரீ கோபாலா கீதவிநோதா ஹரி ஹரி

மாதவா பீதாம்மா என்மானம் கெடாமல் காத்தருள்வாய்
மாதவா தாமோதரா மாவணிவண்ணா ஹரி ஹரி.

தேவமஹேசா தீனர்கள்வாசா பாபவிநாசா பக்தர்கள்நேசா
ஸ்ரீவாசுதேவா தேவ்ஹிபாலா திவ்யபீதாம்பரனே மறைமூலா

வேறு.

மகிமை பிர்மமெஞ்ஞான மாதவரே மாமுனிவறே
வாருமையா சேடியினால் நானறிந்தேன் சேதியெல்லாம் மை

ப்ராணநாதர்ஞான தேவர் அவர்க்குப் பொன்பொருளீடாகுமா
பேதை பாமாளறியாள் கோபாலன் செயல் பெரியமோ
துளசியாகும் ப்ருந்தையாலே என்துரையையான்
சிறைமீட்பேன் மகிமை

வேறு.

சுகுமாரதேகி யாவரோ இவர் சொல்ல என்னால் போமோ சுகு

2 செங்கைத்தாங்கும் சீலனோ காமிகள் பங்காளனோ இவன்
மங்கையர்கள் நேயனோ மகிழ்குஞ்சரி மணாளனோ சுகு

3 ரதிமருவும் காமனோ இவன் காமிகள் பங்காளனோ இவன்
இப்பிரபஞ்ச லோலனோ என்னையாளும் சீலனோ சுகு

4 அன்புக்கேற்றநாதனே இவன் அழகையாள் புனிதனே
அருகிருந்தால் சிலாக்யமே அணைந்திருந்தால் சுகபோக்மே சுகு

வேறு.

சுவாமி ஏழைமேலின்னம் வர்மமா இதுமக்கருணையா ஏ

ஆழமாம் கடல்சூழும் பூமியில் ஆசைவிட்டு
உன்னருள் பொருவில்லையே ஏழை

நீ நினையிலிது பாரமல்ல வெகுமோமுடன் எதிர்க்கின்னே
சாமி நானுன்னைவிடமாட்டேன் சாமியே என்னையா நானுய்ய
எணையா ஏழை

நான்பாதக னத்தமனென்றாலும் நித்தமும் உன்பாதந்நிடும்
பரிவுடயே யதில்சாதனைப் பசுந்தோளிணைத்த சந்தானக்ருஷ்
ண தமிழ்க்கருள் இல்லையே ஏழை

வேறு.

வாமண அவதாரம்,

முரஹரி கேசவா முகுந்தா நந்தா
முகுந்தா நந்தா ஸ்ரீஅரிகோவிந்தா (முர)
மாதவ தாமோதரா வரரண தயாபரா
அகிலலோகாதி பரா
அபயதரா ஸ்ரீஅபயசரா
அபயதரா ஸ்ரீஉபயதரா (முர)

### மச்ச அவதாரம்.

ஓஹோ ராக்ஷக்ஷசுனாரு
வதுசுடி வயிரமு
நாராயனனுகூடி ரபியிஞ்சுப்ரதுகூடி — ஓ

ஜெகமுலோ நாதன்ரி.
ஜென்விஞ்சே நாதுடை
அகமுபாலன மீருநடபிஞ்சுப்ரதுகூடி — ஓ

வேதமுலனுகூடி ஏகினசோமுகா சூரனி
பதபாடி மச்சவதாருடை வதிஇஞ்சே — ஓ

கொர்விஞ்சேபின்தைன்ரி இரவுலோபலஜன
சர்வரக்ஷகூகுட நணிராஜம்பே — ஓ

ஸ்ரீராப்திவதனமு சேயமந்தரகிரி
பாரமுஜே கொண்ண ஆதிமுறிபைரி — ஓ

### செஞ்சுரட்டி மெட்டு.

அரியே உன்னை நம்பினேன் அய்யனே
மலர் கையனே — அரி
பேதாமிலாதவா இந்த ஏழைஇடர் தீர்க்வா
மாதவாபிள்ளை யோதவா — அரி
கரிதனை காத்தவா ககபதி துயர் தீர்த்தவா
காருமே கடைகன் பாருமே — அரி
சுப்பருயன்புகழ் சுரிதிகரசேர் திகழ்
ஒப்பில்லாமணியே ஸ்ரீஓம் — அரி

### திருப்புகழ்.

சிணத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவ ருயிர்க்கும் — சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருபென் — றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தைய முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் — பிறவாமல்
நெருப்பைய மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைச்குஞ் — செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் — தனபேரி

தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்கும்
தளத்துட னடக்கும் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தமலை முற்றுஞ்
சிரித்தெரி கொளுத்தும் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தொடு சுகித்தொண்
திருத்தணியிருக்கும் பெருமாளே

## திருப்புகழ்.

இருமலு ரோக முயலகன் வாதம்
எரிகுண நாசி விடமேநீ
ரிழிவுவி டாத தலைவலி சோகை
எழு கள மாலை இவையோடே
பெருவயி றீளை எரிகுலை சூலை
பெருவலி வேறு முளநோய்கள்
பிறவிக டோறு மெனைநலியாத
படியுன தாள்கள் அருள்வாயே
வருமொரு கோடி அசுரர்ப தாதி
மடியவ நேக இசைபாடி
வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை விடுவோனே
தருநிழல் மீதி லுறைமுகி லூதி
தருதிரு மாதின் மணவாளா
சலமிடை பூவி னடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே.

---

நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி அதனூடே
நெடுநாளு முழைப்புள தாகிப்
பெரியோர்க ளிடைக்கர வாகி
நினைவால் நினடித்தொழில் பேணித் துதியாமல்
தலையான உடற்பிணி ஊறிப்
பவநோயி னலைப்பல வேகிச்
சலமான பயித்திய மாகித் தடுமாறித்

தவியாது பிறப்பையு நாடி
அதன்வேரை அறுத்தனை ஒதித்
தலமீது பிழைத்திட வேநின் அருள்தாராய்

கவியான சுபுத்திர னைக்
குறமாது தனக்கு விநோதக்
கவினூரு புயத்திலு லாவி விளையாடிக்

களிகூரு முனைத்துணை தேடு
மடியேனு னருட்பெற வேவை
கடனாகு முனக்கரு ளான முருகோனே

பலகாலு முனத்தொழு வோர்கள்
மறவாது திருப்புகழ் கூறிப்
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே

பதியான திருத்தணி மேவு
சிவலோக மெனப்பரி வேறு
பவரோக வியித்திய நாத பெருமாளே

---

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்

செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்

மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதமயூரப் பெருமாள்காண்

மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்

அருவரைகள் நீறு படவசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்

அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர் குரு நாதப் பெருமாள்காண்

இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்

இலகுகிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்.

மாற்றறியாதசெழும்பசும்பொன்னே
மாணிக்கமேசுடர்வண்ணக்கொழுந்தே

கூற்றறியாதபெருந்தவருள்ளக்
கோயிலிருந்தகுணப்பெருங்குன்றே

வேற்றறியாதசிற்றம்பலக்கனியே
விச்சையில்வல்லவர்மெச்சுவிருந்தே

சாற்றறியாதவென்சாத்திரங்களித்தாய்
தனிநடராஜவென்சற்குருமணியே,

கற்கரையும்படிக்கரைவிக்குங்கருத்தே
கண்மணியேமணிகலந்தகண்ணொளியே

சொற்கரையின்றியவொளியினுள்ளொளியே
துரியமுங்கடந்திட்டபெரியசெம்பொருளே

சிற்கரைதிரையறுதிருவருட்கடலே
தெள்ளமுதேகனியேசெழும்பாகே

சர்க்கரையேயதுசார்ந்தசெந்தேனே
தனிநடராஜவென்சற்குருமணியே.

---

திருப்புகழ்.

வலிவாத பித்தமொடு களமாலை விப்புருதி
வறள்சூலைகுட்டமொடு குளிர்தாகம்

மலிநீரிழிச்சல்பெரு வயிறீளை கக்குகளை
வருநீர டைப்பினுடன் வெகுகோடி

சிலைநோய டைத்தவுடல் புவிமீதெ டுத்துழல்கை
தெளியாவெ னக்குமினி முடியாதே

சிவமார்தி ருப்புகழை எனிநாவி னிற்புகழ
சிவஞான சித்திதனை அருள்வாயே

தொலையாத பத்தியுள திருமால்க ளிக்கவொரு
சுடர்வீசு சக்ரமதை அருள்ஞான

துவர்வேணி அப்பன்மிகு சிவகாமி கர்த்தன்மிகு
சுகவாரி சித்தனருள் முருகோனே

அலைசூரன் வெற்புமரி முகனானை வத்திரனொ
டசுராரி றக்கவிடு மழல்வேலா

அமுதாச னத்திகுற மடவாள் கரிப்பெணொடும்
அருணாச லத்திலுறை பெருமாளே

---

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி

ஆமமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்

ஏறுமயில் வாகனகு காசரவ ணாவெனது
ஈசவென மான முற என்றுமோதும்

ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவிலுனை
ஏவர்புகழ் வார்மறையும் என்சொலாதோ

நீறுபடு மாழைபொரு மேனியவ வேலவணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே

நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா

சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர் துணை வாசிகரி அண்டகூடம்

சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே

---

மருவே செறித்த குழலார் மயக்கி
மதனுகமத்தின் விரகாலே
மயலே யெழுப்பி இதமே யருத்த
மலைபோல் முலைக்குள் உறவாகிப்
பெருகாத லுற்ற தமியேனை நித்தல்
பிரியாது பட்ச மறவாதே
பிழையேபொ றுத்து னிருதாளி லுற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே
குருவா யரற்கு முபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா
குளிர்காமி குத்த வளர்பூக மெத்து
குடகா விரிக்கு வடபாலார்
திருவே ரகத்தி லுறைவா யுமைக்கொர்
சிறுவா கரிக்கும் இளையோனே
திருமால் தனக்கு மருகா அரக்கர்
சிரமே துணித்த பெருமாளே,

தாயுமானசுவாமிகள் பாடல்.

காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கி சைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுத மூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டிடருற வுறுக்கி யிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்து துயில் கொண்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

வேதாவை யிவ்வணம் விதித்ததே தென்னினுன்
விளைப்பகுதி யென்ப னந்த
விணைபேச வறியாது நிற்கவிவை மன தால்
விளைந்ததான் மனதை நாடிற்
போதமே நிற்குமப் போதத்தை நாடிலோ
போதமு நினுல்வி ளக்கம்
பொய்யன்று தெய்வமறை யாவுமே நீயென்று
போக்குவர வறநி கழ்த்து
மாதார வாதேய முழுதுநீ யாதலா
லகிலமீ தென்னை யாட்டி
யாடல்கண் டவனுநீ யாடுகின் றவனுநீ
யருளுநீ மௌன ஞான
தாதாவு நீபெற்ற தாய்தந்தை தாமுநீ
தமருநீ யாவு நீகாண்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

---

குன்றாத மூவுருவா யருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்து மாடி
நின்றாயே மாயையெனுந் திரையை நீக்கி
நின்னையா ரறியவல்லார் நினைப்போர் நெஞ்சு
மன்றாக வின்பக்கூத் தாட வல்ல
மணியேயென் கண்ணேமா மருந்தே நால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோன ஞான
மமைத்தசின்முத் திரைக்கடலே யமர ரேறே.

வாழ்கவந்தணவர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

148580

## ரோஜா மனவுல்லாச மயிர்வளரும் பரிமள தைலம்.

ஆழாக்கு எண்ணெய் கொண்ட புட்டி 1 க்கு இனாம் சாமான்களுட்பட விலை ரூபா 1. வி. பி. தபாற்கூலியுள்பட 1 6 0

இந்த தைலத்தில் சொஞ்சமெடுத்து கையில் விட்டு தேய்த்து தலைமயிர் வாரிக் கொண்டு வந்தால் செழிப்பாகவும் அழகாகவும் கறுப்புப்பட்டுக்கு நிகராய் கறுக்கச்செய்து ஆலம்விழுதைப்போல ஓங்கிவளரும் மயிர்க்கால்களுக்கு குளிர்ச்சியைக்கொடுத்து மயிரின் சிவந்தநிறத்தை.மாற்றி நாகப்பழம்போன்றகருநிறத்தையுண்டுபண்ணும் இதுவும்மன்றி மண்டையின் மூளைகொதிப்பை[illegible]க்கிக் கண்ணில்நீரோவடிதல் கண்ணருகல் க்ண்ணெரிவுடகண்புகச்சல் சண்டு மயிர்வெடிப்புமயக்கம் தலைசுழற்றல் திரேகத்திலுள்ளசொரிசிரங்கியர்வைநாற்றம் கற்றுநாற்றம் மனசஞ்சலம் ஞாபகமறதி முதலிய வியாதிகளைக் கண்டித்துக் கண்களுக்கு மிககுளிர்ச்சியைத் தருவதுடன் நல்ல பிரகாசத்தையும்பரிமள வசானையையும் திரேகத்திற்குமினுமினுப்பையுந் தந்து முகத்திக்குக்காந்தியையுங் கொடுக்கும் இத்தைலம் அனேக பெரிமனுஷர்களால் நன்குமதித்து சர்டிபிகேட்டுகளும் பெற்றிருக்கின்றது.

ஆழாக்கு எண்ணையின் விலை ரூபா 1. மூன்று டின் ஒரேதடவை வாங்கினால் வி. பி. சிலவு இனாம்.

அருமை சகோதரிகளாகிய லீலாவதி சுலோசனா சிறிய சம்பாஷணை

லீலாவதி...ஹா. ஹா. அடி சுலோசனா உனது கூந்தல் இவ்வளவு புஷ்களமாயும் பளபளப்பாயும் அதிக நிகளமாயுமிருக்கிறதற்கு நீஎன்னசெய்தாய் உன் கூந்தலைப்பார்த்து பொறுமைகொள்ளவில்லை ஆனால் பார்க்கப்பார்க்க ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் தருகிறது.

சுலோசனா—அக்கா உனக்கென்ன பைத்தியமா வெகுகேள்வி கேட்கிறாயே,

லீலாவதி—அடி எனக்கு பைத்தியமில்லை வாஸ்தவத்திலேயே உன் கூந்ததலைப் பார்க்க எனக்கு புளகாங்கிதமாகுதடி உன்னுடையகூந்தல் இப்படி யானதற்குக் காரணம்யாது சொல்,

சுலோசனா—ஐயோ என்ன விபரீதக் கேள்வி என்ன பாவம் அக்கா சகுந்தலா கூந்தல் வளரும் பரிமள எண்ணை தவிர வேறொன்றுமில்லை.

லீலாவதி—அடி போடி சகுந்தலா எண்ணையாவது மேனகை எண்ணையாவது வாஸ்தவத்தைச் சொல்லடி-

சுலோசனா—ஐயோ தெய்வமே நீ ஒரு புட்டி எண்ணையை வாங்கி உபயோகித்தபிறகுஎன்னுடைய உண்மையைப் பார் அக்கா

லீலாவதி—அப்படியா நல்லது இட்சணமே நான் உலகப்பிரசித்தியான இராதாகிருஷ்ணா அண்டு கம்பெனியில் அந்த எண்ணையைத் தருவிக்கிறேன் பார் சுவல்ப விலைதானே.

வைத்தியர், கு. ஆ. கிருஷ்ணசாமிமுதலியார்
சாரங்கபாணி தெற்கு வடம்போக்கி தெரு கும்பகோணம்.